தினமலர்

### நாகையில் 130 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

சம்பா நெற்களை கொள்முதல் செய்வதற்காக, நாகை மாவட்டத்தில் 130 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. முதல் கொள்முதல் நிலையத்தை மேமாத்தூர் பகுதியில் மாவட்ட கலெக்டர் முனுசாமி இன்று துவக்கி வைத்தார்.

### "தண்ணீர் இல்லை... மேய்ச்சலும் போச்சு...'ஊரை காலி செய்யும் ஆடு வளர்ப்பு குடும்பங்கள்

பேரையூர் தாலுகாவில், மேய்ச்சல் நிலங்கள் அடியோடு குறைந்ததாலும், மழையின்றி ஏரி, குளங்கள் வறண்டதாலும் ஆடு வளர்க்கும் தொழில் செய்யும் குடும்பங்கள், பிழைப்புத் தேடி வெளியூர்களுக்கு செல்கின்றன.இத்தாலுகாவில், பேரையூர், டி.கிருஷ்ணாபுரம், எம்.சுப்புலாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆடுகள் வளர்ப்பில் 700 குடும்பங்கள் இருந்தன. இவர்கள், ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி உட்பட பல பகுதிகளில் இருந்து, 20 ஆண்டுகளுக்குமுன் பிழைப்பு தேடி பேரையூர் தாலுகாவில் குடியேறினர். பல்வேறு ஊர்களில் அதிக எண்ணிக்கையில் ஆடுகள் வைத்திருப்பவர்களிடம், கடன் பேரில் ஆடுகளை பெற்று, அதை வளர்த்து, ஆட்டு குட்டிகள் ஈனுவது மூலம், கடனை திருப்பி செலுத்துவார்கள். மேலும், கடன் தொகையை செலுத்தியவுடன், மீதமுள்ள ஆடுகளின் எண்ணிக்கையில், சரிபாதியை அந்த உரிமையாளர்களிடம் திருப்பி கொடுத்து விடுவது இவர்களின் வாழ்க்கை முறை. இந்தாண்டு, பேரையூர் தாலுகாவில் கடும் வறட்சியால், குடிப்பதற்குகூட தண்ணீறின்றி ஏரிகள், குளங்கள் வறண்டன. தண்ணீரை விலைக்கு வாங்கி, ஆடுகளுக்கு கொடுக்கும் சூழல் ஏற்பட்டது. மேலும், மேய்ச்சல் நிலங்கள் 90 சதவீதம் மறைந்துவிட்டன.

இதனால், ஆடுகள் வளர்க்க முடியாத நிலை. "இனியும் இங்கிருந்தால் பிழைப்பு நடத்த முடியாது,' எனக் கருதி, 200க்கும் மேற்பட்ட ஆடு வளர்க்கும் குடும்பங்கள், இத்தாலுகாவை விட்டு வெளியேறி விட்டனர்.இருளப்பன்: ஆடு மேய்க்கும் தொழில் தவிர வேறு தெரியாது. ஆடுகள் மேய்ப்பதற்கு, மேய்ச்சல் நிலங்கள் இப்போது இல்லை. மழை இல்லாததால் தண்ணீரும் இல்லை. ஆட்டு "கிடை'கள் (விவசாய தோட்டங்களில் இரவில் ஆடுகளை அடைத்து, அவை இடும் புழுக்கைகள் விவசாயத்திற்கு பயன்படும்) அமைக்கவும், விவசாயிகள் அழைப்பதில்லை.

இதனால், குடும்பம் நடத்துவதற்கே கஷ்டமாக உள்ளது. வேறுவழியின்றி, கேரளா விவசாயிகளுக்கு, ஆட்டுப் புழுக்கைகளை மூடை ரூ.50க்கு விற்கிறோம்.
விஜயராஜ்: வீடுகள், கட்டடங்கள் கட்டப்பட்டதால் ஆடுகள் மேய்ப்பதற்கு நிலங்கள் இல்லாமல் போனது. ஓலையால் "குடில்'கள் அமைத்து தான் தங்குவோம். இதற்கு இடவாடகை கூட கொடுக்க முடியவில்லை.
ராக்கு: குடும்பத்துடன் பிழைப்பு தேடி பேரையூருக்கு வந்தோம். ரூ.4 லட்சம் பேசி, 100 ஆடுகள் கொண்டு வந்தோம். இதுவரை ரூ.மூன்றரை லட்சம் கடனை செலுத்தி விட்டோம். 30 ஆடுகள் நோயால் இறந்து விட்டன. இச்சூழலில், மீத கடனை எப்படி திருப்பிச் செலுத்துவது என்று தெரியவில்லை. ஆடுகள் மேய்ப்பதற்கு ஏற்ற வேறு இடத்துக்கு செல்ல முடிவு செய்துள்ளோம்.

**கோயம்பேடு சந்தையில் காய்கறி விலை உயர்வு**

கோயம்பேடு:கோயம்பேடு சந்தையில், பெரும்பாலான காய்கறிகளின் விலை, கிலோவிற்கு, 10 ரூபாய் வரை உயர்ந்து உள்ளது. கோயம்பேடு சந்தைக்கு நேற்று, 250 லாரிகள் முதல், 280 லாரிகள் வரை, காய்கறிகள் வந்தன. அதேநேரம், நேற்று பெரும்பாலான காய்கறிகளின் விலை அதிகளவில் இருந்தது. பீன்ஸ் ஒரு கிலோவுக்கு 20ல் இருந்து 30, நூக்கல் 15ல் இருந்து 25, முள்ளங்கி 10ல் இருந்து 20, நவீன் தக்காளி 10ல் இருந்து 15, காலி பிளவர் 15ல் இருந்து 20, பீட்ரூட் 10ல் இருந்து 18, சவ்சவ் 12ல் இருந்து 15, பெல்லாரி வெங்காயம் 12ல் இருந்து 15, புடலங்காய் 10ல் இருந்து 20, வெள்ளரி 12ல் இருந்து 20 ரூபாய் என, விலை அதிகரித்திருந்தது. கத்திரிக்காய், வெண்டை, பச்சை மிளகாய், நாட்டு தக்காளி, அவரை உள்ளிட்ட மற்ற காய்கறிகளின் விலையில் மாற்றமில்லை. இதுகுறித்து, காய்கறி சந்தை மொத்த வியாபாரி சவுந்தரராஜன் கூறுகையில், ""ஊழியர்கள் பற்றாக்குறை, உற்பத்தி பாதிப்பால் வரத்து சற்று குறைந்தது. தேவை அதிகரித்ததால், விலை உயர்ந்துள்ளது. சில நாட்களில் விலையில் மாற்றம் ஏற்படலாம், " என்றார்.

**சோழவந்தான் தேங்காய் விலை திடீர் சரிவு ஏன்**

சோழவந்தான் பகுதியில், பூச்சி தாக்குதலால், சுவை குறைந்த தேங்காய்களை வாங்க முன் வராததால், விலை சரிவு ஏற்பட்டது. சோழவந்தான் பகுதியில் இருந்து, வெளி மாநிலங்களுக்கு தேங்காய் அனுப்பப்படுகிறது. இதனால், இப்பகுதி விவசாயிகள் பெரும் பாலோர், தென்னையை நம்பி வாழ்ந்தனர்.

பருவமழை பொய்த்ததாலும், கிணறு வறண்டதாலும், மரங்கள் பட்டு போயின. மரத்திற்கு 50க்கு மேற்பட்ட காய்கள் உற்பத்தியான நிலை மாறி, 15 காய்கள்தான் உற்பத்தியாகின்றன. கூலி, மற்ற செலவுகள் ரூ.670 க்கு மேல் ஆவதால், வருவாய் கிடைக்காத நிலையில், கேட்ட விலைக்கு மரத்தை வெட்டும் நிலைக்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர். தென்னை சாகுபடி விவசாய சங்கத் தலைவர் சுப்புராம் கூறியதாவது: உற்பத்தி குறைந்து, கூலி மற்ற செலவுகளை ஈடுகட்ட முடியாமல், 40 நாளில் பறிக்கவேண்டிய காய்களை மூன்று மாதம் கழித்து பறிக்கும் நிலை உள்ளது. மூன்று மாதத்திற்கு முன்பு 1150 தேங்காய், ரூ.4600க்கு விற்றது. தற்போது ரூ.2600 ஆக குறைந்துள்ளது. "தென்னையை பெத்தா இளநீரு' என்பதற்கு பதில், "தென்னையை வளர்த்தா கண்ணீரு' என்ற நிலைக்கு ஆளாகியுள்ளோம், என்றார்.

**இயற்கை உரம், தொழில் நுட்பத்தால் அதிக மகசூல் சாதனை விவசாயி தகவல்**

""இயற்கை உரங்களை பயன்படுத்தி, தொழில்நுட்பங்களை கையாண்டால் கூடுதல் மகசூல் பெறலாம்" என, திருந்திய நெல்சாகுபடிக்காக ஜனாதிபதி பிரணாப், முதல்வர் ஜெயலலிதாவிடம் விருது பெற்ற, மதுரை விவசாயி சோலைமலை கூறினார்.மதுரை விவசாயத்துறை துணை இயக்குனர்கள் கனகராஜ், சாரநாத்பாபு, ரவிச்சந்திரன் கூறியதாவது:மதுரை அண்டமான் விவசாயி சோலைமலை, 2011-12ல் தனது வயலில் சி.ஆர்.,1009 (சாவித்ரி) ரகத்தை பயிரிட்டார். திருந்திய நெல் சாகுபடி முறையில், தொழில்நுட்பங்களை கடைபிடித்ததால், ஏக்கருக்கு 8,272 கிலோ மகசூல் கிடைத்தது. இதைப் பாரம்பரிய முறையில் செய்திருந்தால், 4000 கிலோ அளவிற்கே கிடைத்து இருக்கும்.

இம்முறையில் 14 நாள் நாற்றுக்களை, போதிய இடைவெளியில் நட்டு, "கோனோவீடர்' முறையில் களை எடுக்க வேண்டும். பின், நீர்பாய்ச்ச வேண்டும். இயற்கை உரங்களாக மாட்டுச்சாணம், "கம்போஸ்டு' உரம், நுண்ணுயிரிகளை பயன்படுத்த வேண்டும். இவற்றை முறையாக கடைப்பிடித்ததால், மாநில அளவில் வெற்றி பெற்றுள்ளார். இத்தொழில்நுட்பம், 2001 ல் அறிமுகமானது. இதுவரை இந்தளவு யாரும் மகசூல் பெறவில்லை, என்றனர்.விவசாயி சோலைமலை கூறுகையில், ""இம்முறையில் 11 வகைதொழில்நுட்பங்கள் உள்ளன. ரசாயன உரத்தை அதிகம் பயன்படுத்தினால் நோய் தாக்குதல் வரும். பசுந்தாழ் உரம், தொழுஉரம் பயன்படுத்தினால் மண்வளம் பெருகும்.

**நெகமத்தில் கொப்பரை ஏலம் வரத்து அதிகரித்தும் விலை ஏற்றம்**

பொள்ளாச்சி:பொள்ளாச்சி அடுத்த நெகமத்தில், நடந்த கொப்பரை ஏலத்துக்கு கொப்பரை வரத்து அதிகரித்திருந்தாலும், தேவை இருப்பதால் விலையில் ஏற்ற மடைந்துள்ளது. வெளி மார்க்கெட்டிலும் கொப்பரை விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொள்ளாச்சி அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வாரம்தோறும் கொப்பரை ஏலம் நடக்கும். இந்த வாரம் நடந்த கொப்பரை ஏலத்தில், நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் ஏலத்துக்கு கொப்பரையை கொண்டு வந்தனர். இதில், 30 விவசாயிகள் 155 மூட்டை கொப்பரை கொண்டு வந்தனர். ஏலத்தில், ஐந்து வியாபாரிகள் பங்கேற்று ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சென்னியப்பன் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 109 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 45 ரூபாய் முதல் அதிகபட்சமாக 47.80 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 46 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 35.60 ரூபாய் முதல் அதிகபட்சமாக 42.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறியதாவது:

வெளி மார்க்கெட்டில், கொப்பரைக்கான தேவை உள்ளதால் விலையில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஒரு கிலோ 47 முதல் 48 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. பொங்கல் பண்டிகையும் நெருங்கி வருவதால், கொப்பரை விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வெளி மார்க்கெட்டில், விலை அதிகரித்துள்ளதால் அதன் தாக்கம் ஏலத்திலும் பிரதிபலித்துள்ளது. தேங்காய் எண்ணெய் டன்னுக்கு 1,030 முதல் 1,040 ரூபாய் வரை உள்ளது.

இந்த வாரம் நடந்த ஏலத்தில், கடந்த வாரத்தை விட 49 மூட்டை முதல் தர கொப்பரை வரத்து அதிகரித்திருந்தது. இரண்டாம் தர கொப்பரை வரத்து இரண்டு மூட்டை அதிகரித்திருந்தது. மொத்தம் 51 மூட்டை கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது.

தேவை இருப்பதால், விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, இந்த வாரம் முதல் தர கொப்பரை குறைந்த பட்ச விலையில் 1.34 ரூபாய் அதிகரித்துள் ளது.

அதிகபட்ச விலையில் கிலோவுக்கு 1.05 ரூபாய் அதிகரித்திருந்தது. இரண்டாம் தர கொப்பரைக்கு குறைந்தபட்ச விலையில் 1.60 ரூபாயும், அதிகபட்ச விலையில், 1.25 ரூபாயும் அதிகரித்திருந்தது. பொங்கல் பண்டிகையின் போது தேவை மேலும் அதிகரித்தால், விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது. வரும் பொங்கல் பண்டிகையையொட்டி, விலையிலும், வரத்திலும் மாற்றம்

ஏற்படும் வாய்ப்புள்ளது.

இவ்வாறு, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மஞ்சள் இருப்பு வைக்கும் விவசாயிகள்**

விலை உயர்வை எதிர்பார்த்து, திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க துவங்கியுள்ளனர். திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கடந்த டிச., 30ம் தேதி முதல் மஞ்சள் ஏலம் துவக்கப்பட்டது. வாரம் தோறும் புதன்கிழமை நடக்கும் ஏலத்துக்கு, பொங்கலூர், அவிநாசி, பல்லடம் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் கொண்டு வருகின்றனர். மஞ்சள் விலை குவிண்டால் 6 ஆயிரம் ரூபாயாக குறைந்துள்ளது.பருவமழை பொய்த்ததால், ஏற்பட்ட வறட்சி காரணமாக மஞ்சள் சாகுபடி குறைந்துள்ளது. இதனால், மஞ்சள் விலை குவிண்டால் 10 ஆயிரம் முதல் 18ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. விலை உயர வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் மஞ்சள் விற்பனை செய்வதை தவிர்த்துவருகின்றனர்.ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இருப்புவைத்து, பொருளீட்டு கடன் பெறுவதிலேயே ஆர்வம் காட்டிவருகின்றனர். இதுவரை மொத்தம் 200 மூட்டை மஞ்சள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஏலம் நடக்காததால், மஞ்சள் கொள்முதல் செய்ய, வரும் வியாபாரிகள் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

**தக்காளி விலை கடும் சரிவு**

:வரத்து அதிகரித்துள்ளதால், வடக்கு உழவர் சந்தையில் தக்காளி கிலோவுக்கு ஏழு ரூபாய் சரிவடைந்துள்ளது.பெருமாநல்லூர், அவிநாசி, அம்மாபாளையம், நம்பியூர் பகுதிகளில் இருந்து திருப்பூர் வடக்கு உழவர் சந்தைக்கு காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. கடந்த இரு மாதங்களுக்கு முன்பு வரை, வரத்து அதிகரித்திருந்ததால், தக்காளி விலை கிலோ இரண்டு ரூபாய் என, மிகவும் சரிவடைந்து காணப்பட்டது. இம்மாதம் துவக்கத்தில், மூன்று டன்னாக வரத்து குறைந்ததால், படிப்படியாக விலை அதிகரித்து, கடந்த இருநாட்களுக்கு முன்பு வரை தக்காளி கிலோ 12 ரூபாயாக உயர்ந்து காணப்பட்டது. சீசன் துவங்கியுள்ள நிலையில், சந்தைக்கு அம்மாபாளையம், நம்பியூர், தொரவலூர் பகுதிகளில் இருந்து தக்காளி வரத்து நான்கு டன்னாக அதிகரித்துள்ளது; தக்காளி விலையும், கிலோவுக்கு ஏழு ரூபாய் குறைந்து, ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஒரு கூடை தக்காளி (5.5 கிலோ) 60 ரூபாயில் இருந்து, 20 ரூபாயாக விலை சரிவடைந்துள்ளது. தக்காளி விலை, மீண்டும் சரிய துவங்கியுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கொப்பரை கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.2,000 உயர்ந்தது**

வெளிமார்க்கெட்டில் கொப்பரை கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.2,000 உயர்வு, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில், 10 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. 200 கொப்பரை உற்பத்தி களங்கள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொப்பரைகள், பல்லடம் மற்றும் செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் மற்றும் காங்கயம், வெள்ளக்கோவிலில் உள்ள வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. வெளிமார்க்கெட்டில் கடந்த வாரம் ரூ.45 ஆக இருந்த ஒரு கிலோ நடப்பு கொப்பரை, தற்போது ரூ.47 ஆகவும், இருப்பு கருப்பு கொப்பரை ரூ.46ல் இருந்து ரூ.48 ஆகவும் உயர்ந்துள்ளது. டன்னுக்கு ரூ.2,000 விலை அதிகரிப்பு, கொப்பரை உற்பத்தி விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ.99 கோடி: தமிழக அரசு ஒப்புதல்**

விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்களுக்காக ரூ.99 கோடியை ஒதுக்கீடு செய்ய தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நீர்ப்பாசன வசதியை மேம்படுத்துவதற்காக பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள மணிமுக்தா நதித் திட்டம், பிலாந்துரை அணைக்கட்டு, செய்யாறு அணைக்கட்டு ஆகிய திட்டப் பாசனப் பகுதிகளில் 2012-13 முதல் 2015-16 வரையிலும், எல்லீஸ் அணைக்கட்டுத் திட்டம் 2012-13 முதல் 2014-15 வரையிலும் செயல்படுத்தப்படும்.

மணிமுக்தா நதி, பாசன வசதி மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தினை 16,131 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ.46 கோடியே 86 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கும், பிலாந்துரை அணைக்கட்டுப் பகுதியில் 6,985 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ. 20 கோடியே 57 லட்சம் செலவிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். எல்லீஸ் அணைக்கட்டு

பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை 5,232 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ.13 கோடியே 56 லட்சம் செலவிலும், செய்யாறு அணைக்கட்டுப் பகுதியில் 7,952 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ.18 கோடியிலும் பாசன வசதி மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும். மொத்தம் ரூ.99 கோடியே 3 லட்சத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளார். இதனால், 36,300 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

இந்த ஆண்டுக்கு ரூ.21 கோடி ஒதுக்கீடு: பாசன வசதி மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்துக்கு முதல் கட்டமாக இந்த ஆண்டு ரூ.21 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மணிமுக்தா நதித் திட்டப் பகுதிக்கு ரூ.6.52 கோடியும், பிலாந்துரை அணைக்கட்டு, எல்லீஸ் அணைக்கட்டு, செய்யாறு அணைக்கட்டுப் பகுதிகளுக்காக தலா ரூ.4 கோடியே 89 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மொத்தம் 10,400 ஹெக்டேர் நிலம் பயன்பெறும்.

கிராமப்புற இளைஞர்களுக்கு விவசாயக் கருவிகளை இயக்கப் பயிற்சி: விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பழுதுபார்க்கவும், பராமரிக்கவும் போதிய அனுபவம் இல்லாததால் அவற்றை அதிகளவில் பயன்படுத்த விவசாயிகள் தயங்குகின்றனர்.

இதற்குத் தீர்வு காணும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் பல்வேறு வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சி அளிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி கோவை, மதுரை, வேலூர், திருச்சி, திருவாரூர், திருநெல்வேலி ஆகிய 6 வேளாண்மைப் பொறியியல் துறை பணிமனைகளில் பயிற்சி அளிக்கப்படும். இந்த ஆண்டு 300 இளைஞர்களுக்குப் பல்வேறு கருவிகளை இயக்குவதில் பயிற்சி வழங்கப்படும். இதற்காக ரூ.42 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி முறையை முழுமையாக பின்பற்றினால் அதிக மகசூல்: சாதனை விவசாயி**

திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை முழுமையாக பின்பற்றினால், அதிக மகசூல் பெற முடியும், என தமிழக முதல்வரிடம் நெல் சாகுபடியில் சாதனை புரிந்து முதல் பரிசு பெற்ற விவசாயி பெ. சோலமலை தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் திருந்திய நெல்சாகுபடி தொடர்பாக முதல்வர் அறிவித்த போட்டியில், 2011-12-ம் ஆண்டில் அதிக மகசூல் எடுத்து முதலிடம் பிடித்த மதுரை மாவட்டம், வெள்ளியங்குன்றம் ஊராட்சி அண்டமான்

கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பெரியசாமி மகன் பெ.சோலமலை முதல் பரிசான ரூ.5 லட்சத்துக்கான காசோலை, தங்கப்பதக்கத்தைப் பெற்றார். அவர் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அதிக மகசூல் எடுத்தால் பரிசு வழங்குவதாக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்தது குறித்து வேளாண்மை துணை இயக்குநர் எஸ்.கனகராஜ் மற்றும் வேளாண்மை அலுவலர்களை அணுகி விவரம் கேட்டேன். அவர்கள் அறிவுறுத்தல் படி, எனது 2 ஏக்கர் நிலத்தில் சிஆர் 1009 என்ற நெல் ரகத்தைப் பயிரிட்டேன்.

போட்டிக்காக, 50 சென்ட் நிலத்தை ஒதுக்கி திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாய பணிகளை மேற்கொண்டேன். அலுவலர்கள் யோசனைப்படி, திருந்திய நெல் சாகுபடி முறையில் சதுர முறையில் 14 நாள் நாற்றுநடவு செய்தேன். நடவுக்கு பின் 10ஆவது நாள், 20ஆவது நாள், 30ஆவது நாள், 40ஆவது நாள் "சோனாவிடர்' என்ற களைஎடுப்பு கருவி மூலம் களை எடுப்பு செய்தேன். இந்த முறையில் நிலத்தில் எடுக்கப்பட்ட களைகள், அப்படியே நிலத்தில் அமுத்தப்பட்டு உரமாக்கப்பட்டன.

நிலத்தில் ஆடுகளின் கழிவுகளை இயற்கை உரமாகப் போட்டு வந்தேன். போதிய தண்ணீர் பாய்ச்சி வந்தேன். அவ்வப்போது வேளாண்மை அலுவலர்கள் வந்து ஆய்வு செய்து வந்தனர்.

ரசாயன உரங்களை பெரும்பாலும் தவிர்த்தேன். அலுவலர்களின் யோசனைப்படி அவற்றை சிறிதளவு பயன்படுத்தினேன். 150ஆவது நாள் அதிகாரிகள் குழுவினர் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது. எனது 50 சென்ட் நிலத்தில் 4,136 கிலோ நெல் அறுவடை ஆனது. அதாவது, ஏக்கர் கணக்கில் 8,272 கிலோவும், ஹெக்டேர் கணக்கில் 20,680 கிலோவும் கணக்கிடப்பட்டது. வழக்கமான சாகுபடியை விட 2 மடங்கு கூடுதல் மகசூல் கிடைத்தது. இதற்கு செலவு தொகை 50 சென்ட் நிலத்தில் சாகுபடிக்கு ரூ.16,500 மட்டுமே ஆனது. வழக்கமான சாகுபடிக்கு தேவைப்படும் தண்ணீரில் பாதியளவு மட்டுமே தேவைப்பட்டது. சாகுபடி நாள் மட்டும் 150 நாள் எடுத்துக்கொண்டேன்.

போட்டியில் முதலிடம் பிடிப்பேன் என எதிர்பார்க்கவில்லை. சாதிக்க வேண்டும்
என்ற ஆர்வத்தில் பங்கேற்று முதலிடம் பிடித்ததில் வேளாண்மை அதிகாரிகளின் பங்கும் உள்ளது. முதல்வர் கையால் ரூ.5லட்சம் பரிசு மற்றும் தங்கப்பதக்கம் பெற்றது வாழ்நாளில் மறக்க முடியாதது. என்னைப் போன்று மற்ற விவசாயிகளும் சாதனை புரிவதற்காக மட்டுமின்றி குறைந்த தண்ணீர், செலவில் அதிக மகசூல் பெறுவதற்கும் ஊக்கமாக அமைந்துள்ளது, என்னைப்போன்று

மற்ற விவசாயிகளும், சாதனை புரிவதற்காக மட்டுமின்றி, திருந்திய நெல் சாகுபடி முறையை முழுமையாகப் பின்பற்றினால் அதிக மகசூல் கிடைக்கும் என்றார்.

சாத்தனூர் அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்: 15 ஏரிகள் நிரம்பின

சாத்தனூர் அணையில் இருந்து திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு சேர வேண்டிய, 432 மில்லியன் கன அடி தண்ணீர் திறப்பு, ஞாயிற்றுக்கிழமை காலை நிறுத்தப்பட்டது.

சாத்தனூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதி விவசாயிகளுக்காக அவர்களின் உரிமை நீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

தண்ணீர் திறப்பு: அதன்படி, இந்த ஆண்டு அவர்களின் உரிமை நீரான 432 மில்லியன் கன அடி தண்ணீர் இம் மாதம் 21-ம் தேதி முதல் திறக்கப்பட்டது. முதல் 2 நாள்களுக்கு வினாடிக்கு 1000 கன அடி வீதமும், அடுத்த 4 நாள்களுக்கு வினாடிக்கு 750 கன அடி வீதமும் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அணையின் புனல் மின் நிலையம் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டதால், 5.8 மெகாவாட் மின் உற்பத்தியும் தொடங்கி, நடைபெற்றது.

15 ஏரிகள் நிரம்பின: 432 மில்லியன் கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டதால், ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியுடன் தணணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. தண்ணீர் திறப்பால் திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதியைச் சேர்ந்த 15 ஏரிகளில் தண்ணீர் நிரம்பி உள்ளன.

இவற்றில், சித்தலிங்க மடம் ஏரி மட்டும் முழுமையாகவும், மற்ற ஏரிகள் பகுதியளவும் நிரம்பியுள்ளன.

இதன் மூலம் திருக்கோவிலூர் பகுதியைச் சேர்ந்த 5,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**தண்ணீர் பற்றாக்குறையால் மதுரை மாவட்டத்தில் நெல் சாகுபடி குறைவு: வேளாண் அதிகாரி தகவல்**

மதுரை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் மழை குறைந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், மாவட்டத்திலுள்ள நெல் சாகுபடி பரப்பான 65,000 ஹெக்டேரில், 10,000 ஹெக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக, வேளாண்மைத் துறை துணை இயக்குநர் எஸ். கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாட்டில் 2001 ஆம் ஆண்டில் திருந்திய நெல் சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டது. இதில், வழக்கமான சாகுபடி முறையை விட செலவு குறைவு. வழக்கமான நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு நர்சரி 8 சென்ட் நிலத்தில் பயிரிட வேண்டும். விதை நெல்லும் 40 கிலோ தேவைப்படும்.

ஆனால், திருந்திய நெல் சாகுபடிக்கு நர்சரி 1 சென்ட் நிலத்தில் அமைத்தால் போதுமானது. இதில், 1 ஏக்கருக்கு 3 கிலோ விதை நெல் போதுமானது.

இந்த முறையில், ஏக்கருக்கு 8,272 கிலோவும், ஹெக்டேருக்கு 20,680 கிலோவும் நெல் மகசூல் கிடைக்கும். செலவுத் தொகையும் ஏக்கருக்கு ரூ. 23 ஆயிரம் தான். இந்த சாகுபடி முறையில் 11 தொழில்நுட்பங்களை விவசாயிகள் தவறாது பின்பற்றினால், மற்ற சாகுபடியை விட 2 மடங்கு நெல் மகசூல் பெற முடியும்.

குறிப்பாக, ரசாயன உரங்களை தவிர்த்து, இயற்கை உரங்களையோ, மண் புழு உரங்களையோ பயன்படுத்த வேண்டும். தேவைப்படும்பட்சத்தில் மிகக் குறைந்த அளவு வேளாண் அலுவலர்களின் ஆலோசனைப்படி, ரசாயன உரங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த முறையில் பூச்சிக் கொல்லி தாக்குதல் மிகக் குறைவு. மற்ற முறையை விட, பாதி அளவு தண்ணீர் போதுமானது. பெரும்பாலான விவசாயிகள் இயற்கை உரங்களைத் தவிர்தது, ரசாயன உரங்களைப் பயன்படுத்தியதால், நிலங்களில் நுண்ணுயிர் சத்து இல்லாமல் போய்விட்டது. இதனால், மகசூலும் குறைந்துவிட்டது.

விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் கூறப்படும் தொழில்நுட்பங்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். பெரும்பாலான விவசாயிகள் இந்த முறையில் சிலவற்றை மட்டுமே பின்பற்றுவதுடன், ரசாயன உரங்களைப் பயன்படுத்துவதிலேயே கவனமாக இருப்பதால் மகசூல் பாதிக்கப்படுகிறது.

இயற்கை உரத்தை பொறுத்தவரை 1 ஏக்கருக்கு ஒரு பசு மாட்டு சாணம் போதுமானது. இந்த முறையில் எந்த ரக நெற்பயிரையும் சாகுபடி செய்யமுடியும். இந்த சாகுபடி முறையை பின்பற்றுவதற்கு, அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலும் 4 வகையில் இலை வண்ண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இந்த அட்டையில் குறிப்பிடப்பதுள்ள பரிந்துரைகளை, விவசாயிகள் பின்பற்றினால் நல்ல மகசூல் கிடைக்கும்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை திருந்திய நெல்சாகுபடி முறையை பெரும்பாலான விவசாயிகள் பின்பற்றி வருகின்றனர். 2011-12 ஆம் ஆண்டில் 65 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. அப்போது நல்ல தண்ணீர் இருப்பு இருந்தது. இதனால், விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்தது. இந்த ஆண்டு மழை குறைந்து தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால், நெல் சாகுபடி பரப்பளவு 10,000 ஹெக்டேரில் தான் இருக்கிறது. இதில், 60 சதவீதம் பேர் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி பயிரிட்டுள்ளனர்.

முதல்வர் சட்டசபையில் அறிவித்த பரிசுப் போட்டியில், மதுரை மாவட்டத்தில் 500 பேர் திருந்திய

நெல் சாகுபடியில் ஈடுபட்டனர். இதில், வெள்ளியங்குன்றம் ஊராட்சி அன்டமன் கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி மகன் சோலமலை மாநில அளவில் முதலிடம் பிடித்துள்ளார். மற்ற விவசாயிகளும் அவரைப் பின்பற்றி, அதிக நெல் மகசூல் பெற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம், என்றார்.

பேட்டியின்போது, சாதனை விவசாயி சோலமலை, வேளாண் துணை இயக்குநர்கள் ஜி.ஆர். சாரநாத்பாபு, ஆர். ரவிச்சந்திரன், வேளாண்மை அலுவலர் ராமசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

தினகரன்

**ஈரானுக்கு தேயிலை ஏற்றுமதி**



தென்னிந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலைத்தூள் பெரும்பாலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக, ஈரான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளதால் குன்னூர் சி.டி.டி.ஏ. ஏலமையத்தை சேர்ந்த குழுவினர் அந்நாட்டுக்கு சென்று வந்தனர். இதேபோல், ஈரான் வர்த்தகர்களும் குன்னூர் வந்து பார்வையிட்டனர்.

இதனிடையே கடந்த ஆண்டு ஈரான் நாட்டுக்கு 1.59 கோடி கிலோ தேயிலைத்தூள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன்மூலம் ரூ.285கோடி வருமானம் கிடைத்தது. இதுகுறித்து, தேயிலை வாரிய மேம்பாட்டு இயக்குனர் ஜார்ஜென்னர் கூறுகையில், ''நீலகிரி தேயிலையில் தரம் உள்ளதால் ஈரானில் இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது'' என்றார்.